தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1982 பிப்ரவரி 10.

தை 28, துன்மதி திருவள்ளுவர், 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்கடை ''.

அவரவருடைய பண்புகளை ஆராய்ந்து அறிந்து, அவற்றிற்கு ஏற்ற முறையில், அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்யாவிட்டால் நாம் செய்யும் நன்மையால் அவர்களுக்குத் தீமையே உண்டாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்படும் பாம் ஆயில்.

*வினா எண். 121—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாம் ஆயில் ரேஷன் கார்டுகளுக்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் விநியோகம் செய்யப்படுவதற்குப் பதிலாக மாதம் 30 நாட்களிலும் எப்போது வேண்டுமானாலும் வாங்க ஏதுவாக விநியோக முறையை மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் பாமோலின் எண்ணெய்யைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. இந்த எண்ணெய்யை மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து மாநில அரசுகளுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. இப்பொழுது தமிழ்நாட்டிற்கு ஒரு மாதத்திற்கு செய்யப்படும் ஒதுக்கீடு 2,547 டன்கள். இவை போதுமானதாக இல்லை. மத்திய அரசை இந்த சமையல் எண்ணெய்யை அதிக அளவில் ஒதுக்கீடு செய்யக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிக அளவு ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மாதத்தில் அதிக நாட்களிலும் இந்த சமையல் எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யலாம்.

[1982 பிப்ரவரி 10

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு 2,547 டன்கள்தான் பாமாலின் ஆயில் வருகிறது என்றும், அதிகமாகக் கிடைத்தால் மாதம் 30 நாட்களுக்கும் வினியோகம் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இந்த பாமாலின் ஆயில் இந்த நாளில்தான் விநியோகம் செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அது எங்கு இருந்தாலும், நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, தெரிவதில்லை. ஏதோ ஒரு நாளில் வினியோகம் செய்கிறார்கள். அதனால் முந்தியவர்களுக்கு உடனே கிடைத்து விடுகிறது. மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. 1,000 கார்டுகள் இருந்தால் 400, 500 பேர்களுக்குத்தான் கிடைக்கும் நிலை இருக்கிறது. அதே மாதிரி அடுத்த மாதம் போடும்போதும் அதே 400, 500 பேர்கள்தான் வாங்குகிறார்கள். ஆகவே, இதை முறைப்படுத்தி, ஏற்கெனவே வாங்கியவர்கள் மீண்டும் வாங்காமல் இருப்பதற்கும், இதுவரை வாங்காதவர்கள் வாங்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும், இந்த வினியோக முறையை சீர்படுத்தி முறையாக வினியோகிக்க அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்க யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் மாதத்திற்கு ஒரு கிலோதான் தருகின்ற நிலையிலே இருக்கின்றது. அதுகூட எல்லா கார்டுதாரர்களுக்கும் போதாது. ஒருகோடியே 9 இலட்சம் கார்டுகளுக்கு ஒரு கிலோ என்று வைத்துக் கொண்டாலும், நமக்கு 10,900 டன்கள் தேவைப்படுகிறது. ஆகவேதான் 2,547 டன்களை அந்தந்த இடங்களிலே இருக்கின்ற கார்டுகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் பகிர்ந்து தருகிறோம். எப்போது வருகிறது என்று திட்டவட்டமாகத் தெரியாத காரணத்தால் வந்து சேருகிற நாளில் கொடுக்கிறார்கள். முதலிலே யார் யார் வாங்குகின்றார்களோ, அவர்கள் வாங்கிக் கொண்டு போனதற்குப் பின்னால் பற்றாககுறை ஏற்படுகின்றது. பின்னலே வருகின்றவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல முதல் மாதம் வாங்குபவர்கள் அடுத்த மாதம் வாங்காமலும், வாங்காத மற்ற கார்டுதாரர்களுக்கு கிடைக்கின்ற வகையிலும் வினியோகம் செய்ய யோசிக்கலாம். எனினும், எல்லா கார்டுதாரர்களுக்கும் வினியோகம் செய்ய இயலாத காரணத்தினாலும், 2, 3 நாளிலே வந்து சேருகிற உடன் முதலிலே வந்தவர்கள் வாங்கிக் கொண்டு போகிற காரணத்தினாலும், 10 ஆயிரம் டன்னாவது ஒதுக்க வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகாசாமி : தலைவர் அவர்களே, அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு கடுமையான முயற்சி செய்வதற்கு நன்றி. இருந்தாலும், இப்போது புதிதாகக் கார்டுகள் கொடுக்கப்படாததன் காரணமாக, பல பேர்கள் ரேஷன் கார்டுகள்

1982 பிப்ரவரி 10]

வாங்க நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு ரேஷன் கார்டுகளை சீக்கிரமாகக் கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 மாதங்களில் புதிதாகக் கார்டுகள் வழங்கும் நிலைமை இருக்கின்றது. அதற்கு இடையிலே தற்காலிகமாக வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, போதிய அளவுக்கு சப்ளை இல்லை என்ற காரணத்தால் அனைத்துக் கார்டுகளுக்கும் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். இந்த பாமாலின் ஆயில் வாங்குவதற்காக விடியற்காலை 4 மணிக்கே சென்று அங்கே படுத்துவிடுகிறார்கள். அவர்கள் வாங்கி விடுகிறார்கள். அப்படி முன்னாலே வந்து அன்று வாங்க முடியாதவர்களுக்கு, அவர்கள் மீண்டும் 4, 5 மணிக்கு வந்து படுத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு ஒரு டோக்கன் கொடுக்கும் சிஸ்டத்தை அடாப்ட் செய்து கொடுத்தால், அடுத்த நாள் அவர்கள் அந்த டோக்கனைக் காட்டினால் அவர்களுக்கு எண்ணை கிடைக்கும் என்ற நிலை ஏற்படும். அந்த முறையை அரசு கையாளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் ஒரு கிலோ 8.25-க்கு விற்கப்படுவதன் காரணமாகவும், மற்ற ஆயில் ரூபாய் 14, 15 17-க்கு விற்கப்படுவதன் காரணமாகவும், இதற்கு அதிக கிராக்கி இருக்கிறது. அதற்கேற்ப நமக்குக் கிடைக்குமானால், எல்லா கார்டுகளுக்கும் குறைந்த அளவு ஒரு கிலோ தர முடியும். டோக்கன் சிஸ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மிகவும் நல்ல யோசனை. யார் யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு அடுத்த நாளில் கிடைக்கும். அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு அன்றாடம் உபயோகிக்கும் பொருளாக இருக்கும் பாமாலின் எண்ணெய் தமிழகத்தில் கிராமத்தில் இருக்கும் ரேஷன் கார்டு இல்லாத ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. இப்படிப்பட்ட அத்தியாவசியப் பொருளான அந்த எண்ணெய் வாரத்தில் ஒரு நாளோ அல்லது மாதத்தில் ஒரு நாளோ கார்டு இல்லாத ஏழை மக்களுக்கும் வினியோகிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கார்டு வைத்து இருப்பவர்களுக்கே கொடுக்க இயலவில்லை என்று சொல்கிறபோது, அது இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது இயலாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.